# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர். |
| திருமதி.கோ.லதா, | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், |
| நகராட்சி பொறியாளர் (ம)ஆணையாளர்(பொ), | திருநெல்வேலி. |
| நகராட்சி அலுவலகம், | |
| கடையநல்லூர். | |

**ந.க..எண். 1838/2022/இ2** **நாள்: 23.01.2023**

**அய்யா,**

**பொருள்:-** நகர்மன்ற கூட்ட நடவடிக்கைகள் –கடையநல்லூர் நகராட்சி – ஜனவரி–2023 மாதம் நகர்மன்ற அவசரக் கூட்டம் நடத்தப்பட்டது– கூட்ட நடவடிக்கை விபரங்கள் அனுப்பிவைத்தல்– சார்பாக.

**பார்வை.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் குறிப்பாணை கடித ந.க.எண்.2652/2022/அ3, நாள்.18.07.2022.

*****

பார்வையில் காணும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, இந்நகராட்சியில் 23.01.2023 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின், கூட்ட நடவடிக்கை விபரங்கள் இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.

**இணைப்பு.**
23.01.2023 அன்று நடைபெற்ற
நகர்மன்றக்கூட்டப் பொருள்

**நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை.
2. மாவட்ட ஆட்சித்தலைவர், தென்காசி.

## கடையநல்லூர் நகராட்சி
## 23.01.2023 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டப்பொருள்கள் விவரம்.

**பொருள் எண்.1**

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கடையநல்லூர் நகராட்சி பகுதியில் உருவாகும் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என நூறு சதவீதம் (100%) பிரித்து மக்கும் குப்பைகளை MCC கழிவுகள் செயலாக்க மையத்திலும். மக்காத குப்பைகளை MRF வள மீட்பு மையத்திலும் கொண்டு வந்து கொடுப்பதற்கு ஒரு டன்னிற்கு ரூ.4709.78 என நிர்ணயம் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.32945/2022/EA2-SWM-3 நாள்.10.01.2023ன்படி மூன்று ஆண்டுகளுக்கு ஆண்டு உத்தேச செலவினம் ரூ.629.80 இலட்சம் மற்றும் சேவை கட்டணத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு மூன்று ஆண்டுகளுக்கு பணி செய்ய ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும். ஒப்பந்த நிறுவனத்தின் திருப்திகரமான செயல்பாட்டின் அடிப்படையில் ஆண்டுக்கு ஒருமுறை நீட்டிப்பு செய்யவும், மூன்றாண்டுகளுக்கு ஏற்படும் மொத்த மதிப்பீட்டு தொகை சேவைக்கட்டணம் மற்றும் இது தொடர்பான இதர செலவினங்களுக்கும் நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிடவும், பொது நிதியில் போதிய நிதி இல்லாத நிலையில் 15வது மத்திய நிதிக்குழுவின் திடக்கழிவு மேலாண்மை (TIED GRANT) தலைப்பின் கீழ் அனுமதிக்கப்படும் மான்யத்தின் கீழ் செலவிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.207/2023/எச்1)**

**தீர்மானம் எண்:– 284**

அனுமதிக்கப்படுகிறது

**(ஒம்) M.A.ஹபீபுர் ரஹ்மான்,**
**நகர் மன்ற தலைவர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்(பொ),**
**கடையநல்லூர் நகராட்சி.**